DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

--

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.

வழக்கு எண்.	SC No.181/22	அரசுத்தரப்பு	P.W.6
பெயர்	ஆனந்த்	கிராமம்	
தந்தை / கணவர் பெயர்	மருதமுத்து	வட்டம்	
வயது		மாவட்டம்	

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 15.07.2025.

2வது எதிரி ஆஜர். 1வது எதிரி ஆஜர் இல்லை. எதிரி ஆஜராகாததை மன்னிக்க மனு கொடுக்கப்பட்டு அம்மனு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>

நான் திருக்கோகர்ணம் குண்டுபோடும் பாறையில் குடியிருந்து வருகிறேன். நான் ஆசாரி வேலை செய்து வருகிறேன். கருப்பையா என்பவர் எனது வீட்டிற்கு பக்கத்து வீட்டில் தான் குடியிருந்து வருகிறார். 15.08.2021 தேதியில் நான் சென்னையில் இருந்து எனது வீட்டிற்கு வந்தபோது காலை சுமார் 9.00 மணி இருக்கும். கருப்பையா வீட்டின் முன்பு கூட்டமாக இருந்தது. கருப்பையா வீட்டில் நெருப்பு விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். அது சம்மந்தமாக போலிசார் விசாரித்துக் கொண்டிருந்தார்கள். என்னையும் விசாரித்தார்கள். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பவம் பற்றி வேறொன்றும் தெரியாது.

அரசுதரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய கேட்டுக்கொண்டதன்பேரில் அனுமதி அளிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.

போலிசார் என்னை விசாரித்தபோது 15.08.2021 தேதியில அதிகாலை சுமார் 2.45 மணிக்கு நான் எனது வீட்டு வாசலில் தூங்கி கொண்டிருந்தேன் என்றும் அப்போது எங்களு வீட்டின் அருகே வசிக்கும் கருப்பையாவின் வீட்டில் ஏதோ சத்தம் கேட்டு நான் எழுந்து வந்து பார்த்தபோது எங்கள் ஏரியாவை சேர்ந்த இந்த வழக்கின் எதிரிகள் சின்னமணியும், சின்னமணியின் நண்பர்கள் கருப்பசாமியும், கோழிவிஜய்யும் நின்று கொண்டு ஒரு பாட்டிலை எடுத்து அதில் கருப்பசாமி தீயை வைக்க அதனை சின்னமணி வாங்கி கருப்பையாவின் வீட்டின் முன்பு தூக்கி எறிந்துவிட்டு என்னை பார்த்ததும் வேகமாக அவர்கள் வந்த splender plus இரு சக்கர வாகனத்தில் அங்கிருந்து சென்று விட்டார்கள் என்றும் இதனை எங்கள் வீட்டின் எதிரே வசிக்கும் தர்மராஜ் பார்த்தார் என்றும் அவர்கள் எறிந்த பெட்ரோல் குண்டு கருப்பையா வீட்டின் முன் பக்க கதவில்

பட்டு வெடித்து தீ பற்றி எறிந்தது என்றும் கதவின் முன் பக்க ஸ்கிரின் துணி எறிந்தது என்றும், கருப்பையாவின் வீட்டில் உள்ளவர்கள் வெளியே வந்து பார்த்து என்னிடம் விசாரித்தார்கள் என்றும் அப்போது நான் எப்பொழுதும் உங்கள் வீட்டிற்கு முன்பாக மது அருந்திவிட்டு வந்து தகராறு செய்பவர்கள் தான் splender plus இரு சக்கர வாகனத்தில் வந்து பெட்ரோல் குண்டு வீசிவிட்டு சென்றார்கள் என்று சொன்னேன் என்றும், எதிரிகள் எங்களிடம் பிரச்சனை செய்தாலும் பரவாயில்லை என்று போலிஸ் விசாரணையின்போது சொன்னேன் என்று சொன்னால் சரியல்ல. தற்போது எதிரிகளிடம் பிரச்சனை வேண்டாம் என்றும் எதிரிகளை கண்டு பயந்து கொண்டு பார்த்த உண்மை சம்பவத்தை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> – இல்லை.

Sd/– ஆனந்த்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.